# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

TAMILNADU POLLUTION CONTROL BOARD

**Press Release**

**Changes in the procedure of Auto Renewal process**

As per Section 25 of the Water (P&CA) Act, 1974 and as per Section 21 of the Air (P&CP) Act, 1981, all industries shall have valid consent of the Board to operate their industrial plant. However, due to difficulties in submitting the detailed application forms for CTO and RCO and due to delay in processing large number of applications in the month of March and April and also as the validity of all consents end on 31st March, several industries operate their industrial plant without valid consent of the Board.

Hence, the Board introduced a mechanism called the auto renewal process in 2014 for issuing RCO within 7 days on receipt of renewal applications in form A for Red Small, all Orange and Green category of industries without prior inspection but after placing before DLCCC. Subsequently after the introduction of the OCMMS software it has been modified to make the auto renewal application process very simple for the industries and to generate RCOs without inspections in OCMMS. At present only a very few industries are applying for auto renewal.

In spite of the auto renewal provision several industries are not opting for auto renewal as they are not aware of such provision. Also, the auto renewal process has been modified and made simple to avoid delay and for speedy disposal of the auto renewal applications. Hence, the industries can apply for auto renewal in OCMMS instantly by submitting Form A and the same will be processed and renewal consent order will be issued without delay.

Auto renewal of consent is applicable to the existing industries of Red small category and all Orange and Green categories which have obtained CTO and Auto renewal of consent is issued for first and subsequent renewals and in block (maximum of 5/10/14 years for Red / Orange / Green category) as per the options exercised by the industries.

09/06/2022

**for Chairman**

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in

# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

**செய்தி வெளியீடு**

**தானாக இசைவாணை புதுப்பித்தல் செயல்முறையில் மாற்றங்கள்**

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974-இன் பிரிவு 25-இன் படி மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981-இன் பிரிவு 21-இன் படியும், அனைத்து தொழிற்சாலைகளும் தங்கள் தொழிற்சாலையை இயக்க வாரியத்தின் இசைவாணையைப் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும், இயக்குவதற்கான இசைவாணை மற்றும் இசைவாணை புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான விரிவான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதில் உள்ள நடைமுறை சிக்கல்கள் மற்றும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்களை சரிபார்ப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் அனைத்து இசைவாணைகளின் காலம் மார்ச் 31-ஆம் தேதி முடிவடைதல் ஆகியவைகளால், பல தொழிற்சாலைகள் வாரியத்தின் இசைவாணை இல்லாமல் இயக்கத்தை தொடரும் நிலை ஏற்படுகிறது.

எனவே, 2014-ஆம் ஆண்டு வாரியம் தானாக இசைவாணை புதுப்பித்தல் செயல்முறை எனப்படும் ஒரு புதிய வழிமுறையை அறிமுகப்படுத்தியது. இந்த முறையானது சிறியவகை சிவப்பு, அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கான புதுப்பித்தல் விண்ணப்பங்களைப் பெற்ற 7 நாட்களுக்குள் கள ஆய்வு இல்லாமல் ஆனால் மாவட்ட அளவிலான இசைவாணை வழங்கும் குழுவின் ஆய்விற்கு பிறகு இசைவாணை புதுப்பிக்க வழிசெய்கிறது. இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு (OCMMS) மென்பொருளின் அறிமுகத்திற்குப் பிறகு, தொழிற்சாலைகளுக்கு தானாக இசைவாணை புதுப்பித்தல் விண்ணப்ப செயல்முறையை மிகவும் எளிதாக்குவதற்கு, OCMMS-இல் கள ஆய்வுகள் இல்லாமல் இசைவாணைகளை புதுப்பிப்பதற்கு மாற்றம் செய்யப்பட்டது. இருப்பினும் ஒரு சில தொழிற்சாலைகள் மட்டுமே தானாக புதுப்பித்தலுக்கு விண்ணப்பித்து வருகின்றன.

தானாக புதுப்பித்தல் ஏற்பாடு இருந்தபோதிலும், பல தொழிற்சாலைகள் இவ்வசதியை அவைகளுக்கு போதுமான விழிப்புணர்வு இல்லாததால் பயன்படுத்தவில்லை., தற்போது தானாக இசைவாணை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கவும், தானாகப் புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு விரைவாக ஒப்புதல் வழங்கவும் இச்செயல்முறை மாற்றியமைக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, தொழிற்சாலைகள் OCMMS-இல் தானாகவே இசைவாணையைப் புதுப்பிக்க, படிவம் A-வுடன் விண்ணப்பத்திணை சமர்ப்பிக்கும் பட்சத்தில் உடனடியாக விண்ணப்பம் ஏற்கப்பட்டு இசைவாணை தாமதமின்றி

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in

வழங்கப்படும். (படிவம் A https://ocmms.tn.gov.in/OCMMS/ என்ற இணையதளத்தில் INFORMATION எனும் தலைப்பின்கீழ் கிடைக்கும்).

இயக்குவதற்கான இசைவாணைப் பெற்றுள்ள சிறிய சிவப்பு வகை தொழிற்சாலைகளுக்கும், அனைத்து ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகளுக்கும் தானாக இசைவாணை வழங்கப்படும். மேலும், மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகள் விருப்பத்திற்கேற்ப தொகுப்பாக 5 / 10 / 14 ஆண்டுகளுக்கு முறையே சிறியவகை சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை வகை தொழிற்சாலைகள் இசைவாணையைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

09/06/2022

தலைவருக்காக